Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 27, 2024

திங்கட்கிழமை மே 27, 2024 | ஒளி: 09 கதிர்: 260 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## இலஞ்சம் வாங்கிய காதி நீதவான் கைது

விவாகரத்து மற்றும் விவாகரத்து ஆணையை வழங்குவதற்காக பெண்ணொருவரிடம் 4,500 ரூபாய் இலஞ்சம் கோரிய போது, கண்டி-உடதலவின்ன பகுதியில் வைத்து இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

## “பாராளுமன்றம் கலைக்கப்படாது”



ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நிச்சயமாக நடத்தப்படும் எனவும் அதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 10 பில்லியன் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளதாகவும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## டயானா எடுத்த தீர்மானங்கள் இரத்தாகாது

டயானா கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்பட்டாலும், பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் அவர் எடுத்த தீர்மானங்கள் எதுவும் இரத்து செய்யப்பட மாட்டாது என பாராளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

வடமாகாணத்தில் எஞ்சியுள்ள

# காணி பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்;**

**கேப்பாப்பிலவில் பெண்கள் இருவர் முன்வைத்த கோரிக்கைக்கு பலன்**



முல்லைத்தீவு மாவட்டத்தில் ‘உறுமய’ வேலைத்திட்டத்தின் கீழ் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் பங்கேற்பதற்காகப் புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஞாயிற்றுக்கிழமை (26) சென்றார். அப்போது. ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும் எனக்கூறி அப்பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்கள், கல்லூரி முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விடயத்தை அறிந்த வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இரு பெண்களும் இருந்த இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினை என்னவென்று வினவினார்.

தொடர்ச்சி P2



இயற்கை அனர்த்தங்களால்

## 8 பேர் பலி: 45,509 பேர் பாதிப்பு

நாடளாவிய ரீதியில், 19 மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக நிலவும் சீரற்ற வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்குண்டு 8 பேர் மரணமடைந்துள்ளனர். 13 பேர் காயமடைந்துள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## விக்னேஸ்வரனிடம் நலம் விசாரித்தார் ரணில்



வடக்குக்கு விஜயம் செய்து, பல்வேறான வேலைத்திட்டங்களை மக்களிடம் கையளித்துவரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அரசியல் பேதமின்றி பல சந்திப்புகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

தொடர்ச்சி P2



## “பழமையான இரண்டு போக்கையும் மாற்ற வேண்டும்”

**கிளிநொச்சியில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு**

பழமையான பொருளாதார முறையினால் தான் இந்த நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே, புதிய பொருளாதார முறைமையை உருவாக்குவதன் ஊடாக புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்க வேண்டும் எனவும் குறிப்பிட்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாட்டைக் கட்டியெழுப்புவதற்குப் பழமையான பொருளாதாரப் போக்கையும் அரசியல் போக்கையும் மாற்றியமைக்க வேண்டும் என்றார்.

இரணைமடு, நெலும் பியச மண்டபத்தில் சனிக்கிழமை (25) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிளிநொச்சி மாவட்ட இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “88-89 யுகத்திற்கு நாம் திரும்பிச் செல்லக்கூடாது”

**ஹட்டனில் அமைச்சர் விஜயதாச**



சுமார் இருநூறு வருடங்களாக எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெருந்தோட்ட மக்களின் பங்களிப்பை நாம் பாராட்ட வேண்டும். நாட்டில் எவ்வாறான பிரச்சினைகள் இருந்த போதிலும் பெருந்தோட்ட மக்கள் பெரும் பங்களிப்பை வழங்கினர் என தெரிவித்த நீதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்‌ஷ, முப்பது வருட யுத்த அனுபவத்தைப் பார்த்தோம். 88-89 மக்கள் விடுதலை முன்னணியின் பயங்கரத்தை நாங்கள் பார்த்தோம். அத்தகைய யுகத்திற்கு நாம் திரும்பிச் செல்லக்கூடாது எனக் கேட்டுக்கொண்டார்.

நுவரெலியா மாவட்டத்தின் தகுதியான அதிபர்கள்,

தொடர்ச்சி P2

## ஐ.எஸ்.ஐ.எஸ்க்கு உதவியவர்: தகவல் தருமாறு கோரிக்கை



இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளான நான்கு இலங்கையர்களுடன் தொடர்புடைய தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்வதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

தொடர்ச்சி P2

## காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கல்



‘உறுமய’ வேலைத்திட்டத்தின் கீழ், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலக அலுவலகங்களை உள்ளடக்கும் வகையில் 600 காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு புதுக்குடியிருப்பு மத்திய மகா வித்தியாலயத்தில் ஞாயிற்றக்கிழமை (26) நடைப்பெற்றது.

மேலும், இவர்களுக்கான காணி உறுதிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி வைத்ததோடு, முல்லைத்தீவு மாவட்டத்தில் ‘உறுமய’ திட்டத்தின் கீழ் 1,376 முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## அழிந்ததன் பின்னர் தான் ஐயா கோரப் போகின்றாரா?

எஸ்.தில்லைநாதன்



தமிழினம் அழிந்ததன் பின்னர் தான் சம்பந்தன் வெளியக சுய நிர்ணய உரிமையைக் கோரப் போகின்றாரா? என தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வேட்பாளர் தொடர்பில் இரா.சம்பந்தன் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்து

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## "பாராளுமன்றம்...

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை இவ்வருடத்தில் நடத்துவது கட்டாயமாகும் எனவும் தேர்தலுக்கான திகதிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அதன்படி, இந்த ஆண்டு செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களில் தேர்தலை நடத்த வேண்டும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

தற்போதைக்கு பாராளுமன்றம் கலைக்கப்பட மாட்டாது எனவும், அரசியல் வங்குரோத்து நிலையில் உள்ளவர்கள் மற்றும் அரசியல் கட்சிகளால் இவ்வாறான பொய்யான அறிக்கைகள் வெளியிடப்படுவதாகவும், சர்வஜன வாக்கெடுப்பு அல்லது வேறு வழிகளில் ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிக்கப்பட மாட்டாது எனவும் அமைச்சர் கலாநிதி குணவர்தன தெரிவித்தார்.

ஜனநாயக ரீதியில் தேர்தலை நடத்துவதே ஜனாதிபதியின் நோக்கமாகும் எனவும், உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் முதலில் பொதுத் தேர்தலை நடத்தலாம் என்ற செய்தியை மறுத்த ஜனாதிபதி விக்ரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என அண்மையில் அமைச்சரவையில் தெரிவித்திருந்தார்.

## டயானா எடுத்த தீர்மானங்கள்...

இது தொடர்பில் பாராளுமன்றத்தின் பிரதிப் பொதுச் செயலாளரும் தலைமை அதிகாரியுமான சமிந்த குலரத்னவிடம் வினவியபோது, டயானா கமகே பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது எடுத்த தீர்மானங்கள் எதுவும் சட்டத்தின் பிரகாரம் இரத்து செய்யப்பட மாட்டாது.

இதன்படி, நாடாளுமன்றத்தில் மசோதாக்கள் நிறைவேற்றப்படும்போது அவரது வாக்குகள் மற்றும் பிற முடிவுகள் இரத்து செய்யப்படாது என்று கூறப்படுகிறது.

மேலும், அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் அரசாங்கத்திடம் இருந்து பெற்ற சம்பளம் மற்றும் இதர சலுகைகள் நீதிமன்றம் உத்தரவிட்டால் மட்டுமே ரத்து செய்யப்படும் அல்லது மீண்டும் வழங்கப்படும் என பாராளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

## அழிந்ததன் பின்னர் தான்...

தொடர்பில் எம்.கே.சிவாஜிலிங்கம் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், இணைந்த வடக்கு கிழக்குக்கு சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வுடன் கூடிய தீர்வு என்பதுதான், சர்வதேச மட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கை அரசும் சேர்ந்து இணங்கிக் கொண்ட விடயம். அதற்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் முடிவு எதையும் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் எடுக்கக்கூடாது என்று தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா கூறியிருக்கின்றார்.

இலங்கை அரசு இன்னமும் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை ஈழத் தமிழர்களின் இனப் பிரச்சினை தீர்வாகக் கொண்டுள்ளது என்பது அடி முட்டாள்தனமான நம்பிக்கை.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைப்பிற்கான பொதுமக்கள் வாக்கெடுப்பு கிழக்கு மாகாணத்தில் நடைபெறாமலேயே உயர் நீதிமன்ற தீர்ப்பின்படி பிரிக்கப்பட்டு, 18 ஆண்டுகள் கடந்துவிட்டன. அருகருகே இருக்கக்கூடிய இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் தீர்மானத்தைச் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றி இணைக்க முடியும் என அன்றைய பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அந்தத் தீர்ப்பிலேயே தெரிவித்திருந்தார்.

உள்ளக சுயநிர்ணய உரிமை என ஐக்கிய நாடுகள் சபையின் நியமங்களின் அடிப்படையிலோ அல்லது சர்வதேச சட்டங்களிலோ கிடையாது. சுயநிர்ணய உரிமை என மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது.

இலட்சக் கணக்கான ஈழத் தமிழர்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள்.

எனவே, பொதுமக்கள் வாக்கெடுப்பை வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நடத்த முடியாது என சம்பந்தன் ஐயா கூறுவது தவறானது.

ஐக்கிய நாடுகள் சபையினால் அல்லது சர்வதேச சமூகத்தினரால் நடத்தப்படும் சுதந்திரத்திற்கான பொதுமக்கள் வாக்கெடுப்பு புலம்பெயர் மக்கள் தாங்கள் வாழும் நாடுகளிலேயே வாக்களிக்க முடியும் இதற்கு பல நாடுகளில் நடைபெற்ற வாக்களிப்புக்களை உதாரணமாகக் கூற முடியும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# காணி பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

தங்களின் பிரச்சினையை ஜனாதிபதியிடம் முன்வைக்க வேண்டும் என அவ்விரு பெண்களும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, வடமாகாண ஆளுநரால் இது குறித்து ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க போராட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

காணிப் பிரச்சினை காரணமாகத் தாம் உட்பட கேப்பாப்பிலவு கிராமத்தில் வசிக்கும் 56 குடும்பங்கள் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும், எனவே, இதற்கு உடனடியாக தீர்வு காண ஏற்பாடு செய்யுமாறும் குறித்த பெண்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்தப் பிரச்சினையை விரைவாகக் கண்டறிந்து அதற்குத் தீர்வுகாணுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கவுள்ளதாகத் தெரிவித்தார். அத்துடன், வடமாகாணத்தில் பெருமளவிலான காணிகளை விடுவிக்க அரசாங்கம் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், எஞ்சியுள்ள காணி பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதே தமது எதிர்பார்ப்பு எனவும் குறிப்பிட்டார்.

போராட்டத்தில் கலந்துகொண்ட தம்மைச் சந்தித்து, தமது பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்தமைக்கு, போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் தமது நன்றியை வெளிப்படுத்தினர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "88-89 யுகத்திற்கு நாம்...

தர்ம பாடசாலை ஆசிரியர்கள், பதிவாளர்கள், தோட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவையாளர்களுக்கு சமாதான நீதிவான் நியமனம் வழங்கும் நிகழ்வு ஹட்டன், கொட்டகலை, குடாஓயா GRAND MAHARAJ ஹோட்டலில், சனிக்கிழமை (25) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பி.இராதாகிருஷ்ணனின் பரிந்துரையின் பேரில் 330 சமூக சேவையாளர்கள் சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டனர்.

அங்கு விஜயதாச ராஜபக்ஷ உரையாற்றுகையில்,

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும் நாங்கள் மதிக்கிறோம். நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முன்மாதிரியான தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. இராதாகிருஷ்ணனும் நாங்களும் இந்த நாட்டு மக்களுக்காக அரசியல் செய்கிறோம். அவருடைய அரசியல் கொள்கைகளும் என்னுடைய கொள்கைகளும் ஒன்றுதான். ஆனால், தற்போது அரசியல்வாதிகள் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

உலகில் 80 சதவீத பிரச்சனைகளுக்கு தகுதி இல்லாதவர்களுக்கு பதவி வழங்குவதே காரணம். முப்பது வருட யுத்த அனுபவத்தைப் பார்த்தோம்.

88-89 மக்கள் விடுதலை முன்னணியின் பயங்கரத்தை நாங்கள் பார்த்தோம். அத்தகைய யுகத்திற்கு நாம் திரும்பிச் செல்லக்கூடாது.

மக்களுக்காக அரசியல் செய்ய வேண்டும். மக்களுக்கு காணி பிரச்சினை உள்ளது. சம்பளத்தில் சிக்கல்கள் உள்ளன. தோட்ட மக்களின் சம்பளத்தை அதிகரிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது. அதற்கான தீர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த நாட்டை உருவாக்குவது அரசியல்வாதிகளின் பொறுப்பு. திருட்டு, ஊழல், மோசடிகளை ஒழிக்க புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளது. நல்ல சமுதாயத்தை கட்டியெழுப்ப தேவையான சட்ட சூழலை நாங்கள் தயார் செய்தோம். மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பேசியவர்களை விட வார்த்தைகளால் செய்தோம். இந்த நாட்டை சிறந்த நாடாக மாற்ற, அணுகுமுறையில் மாற்றத்தை உருவாக்க வேண்டும்.

நமது நாட்டின் கிராமப்புறங்களில் வாழும் மக்கள் இன, மதவெறி கொண்டவர்கள் அல்லர். தேசிய மற்றும் மத ஒற்றுமையை அவர்கள் விரும்புகின்றனர். சில அரசியல்வாதிகள் எமது மக்களை பிரிவுகளாக பிரித்துள்ளதாகவும் இவ்வாறான நிலைகளை களைவதற்கு மக்கள் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டுமென நீதி அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

## "பழமையான இரண்டு...

கிளிநொச்சி மாவட்ட இளைஞர்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை நேரடியாக ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கும் சந்தர்ப்பமும் இதன்போது வழங்கப்பட்டது.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் கூறியதாவது:

இங்கு பலர் என்னிடம் பல்வேறு விடயங்களை முன்வைத்தனர். இப்பிரதேச இளைஞர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருவதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. இளைஞர்களுக்கு வருமான வழிகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் அவசியம்.

முதலில் யாழ்ப்பாணத்தில் அல்லது தேசிய மட்டத்தில் இந்தப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும். கடந்த நான்கு வருடங்களாக எமது நாட்டில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. கோவிட் தொற்று காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. தொழில் வாய்ப்புகள் இழக்கப்பட்டன. இத்தகைய கடினமான நேரத்தில் நான் நாட்டைப் பொறுப்பேற்றேன்.

இன்று நாம் செய்ய வேண்டிய முதல் காரியம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதுதான். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் 2023-2024 திட்டத்தை நான் இப்போது ஆரம்பித்துள்ளேன். நாடு வங்குரோத்தடைந்துள்ளதை உலகமே ஏற்றுக்கொண்டது. இப்போது நாடு வங்குரோத்து நிலையில் இல்லை என்று இப்பொழுது நாம் கூற வேண்டும்.

நாடு வங்குரோத்தாகும் பட்சத்தில் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் நம்முடன் இணைந்து செயல்படாது. நாட்டு மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். தொழில் செய்பவர்களுக்கு போதிய சம்பளம் கிடைப்பதில்லை. வேலையில்லா திண்டாட்டம் ஏன் ஏற்பட்டது? பழைய பொருளாதார முறையினால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்பட்டது.

தாய்லாந்து, வியட்நாம், மலேசியா போன்ற நாடுகள் ஏற்றுமதி பொருளாதாரத்தில் முன்னேறி வருகின்றன. பணம் இல்லாததால் கடன் வாங்குகிறோம். இப்போது கடனை திருப்பிச் செலுத்த வழியில்லை. இந்தப் பிரச்சினையில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவேன். ஆனால், நாம் அதிக கடன் எடுத்தால் நாடென்ற ரீதியில் மேலும் நெருக்கி நிலை உருவாகும். அரச தொழில்களை வழங்கவும் பணம் இல்லை.

இனிமேலாவது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தேர்தல் காலத்தில் தொழில் வழங்குவதாக அரசியல்வாதிகள் வாக்குறுதி அளிக்கின்றனர். இது பணமில்லாத வெறும் பணப்பையுடன் பயணம் செய்வது போன்றது. இந்த நிலையை நாம் நேருக்கு நேர் எதிர்கொள்ள வேண்டும். புதிய பொருளாதார அமைப்பை உருவாக்கி தொழில் வாய்ப்புகளை வழங்க வேண்டும்.

சுற்றுலா வளர்ச்சியடையும் போது தொழில் வாய்ப்புகள் உருவாகின்றன. நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை, குறைந்தது 50 இலட்சமாக அதிகரிக்க வேண்டும். இந்த நாட்டிற்கு வரும் ஒரு சுற்றுலாப் பயணி ஒரு நாளைக்கு 150 டொலர்களை மட்டுமே செலவிடுகிறார். ஆனால் அவர்களிடமிருந்து குறைந்தபட்சம் 400-500 டொலர்களைப் பெறுவதற்கான பொறிமுறையை நாங்கள் உருவாக்க வேண்டும். சில இளைஞர்கள் கிரிப்டோ பரிவர்த்தனைகள் செய்கின்றனர். அங்குள்ள விதிகளைத் தளர்த்துமாறு கூறுகிறார்கள்.

விவசாயத்தை மேம்படுத்துவது நமது மற்றொரு குறிக்கோளாகும். கடந்த காலங்களில் பயிர்களை ஏற்றுமதி செய்தோம். ஆனால், சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்றுமதித் துறை நலிவடைந்தது. நமது நிலத்தைப் பயன்படுத்தி நவீன விவசாயத்தை உருவாக்க வேண்டும். கிராமத்திற்கு ஸ்மார்ட் விவசாயம் வழங்கும் வேலைத்திட்டம் அடுத்த வருடம் முதல் ஆரம்பிக்கப்படும்.

கொழும்பில் ஸ்மார்ட் விவசாயம் மேற்கொள்ள முடியாது. தூரப்பிரதேச கிராமங்களில் இதைச் செய்யலாம். ஒரு நாடு முன்னேற, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்க வேண்டும். அடுத்ததாக, நமது கைத்தொழில் துறையை அதிகரிக்க வேண்டும். அதன் மூலம் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இந்தப் பிரதேசத்தில் முதலீட்டு வலயங்களை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

கணினி கல்வியையும் மேம்படுத்த வேண்டும். இப்பயணத்தைத் தொடர்வோம். இங்கே சிக்கிக் கொண்டிருந்தால் உலகை வெல்ல முடியாது. நான் இளைஞனாக இருந்த காலத்தில், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பொருளாதார ரீதியில் முன்னணியில் இருந்தது. ஆனால், தற்போது சிங்கப்பூர், மலேசியா, சீனா, வியட்நாம் ஆகிய நாடுகள் முன்னேறியுள்ளன. இப்படியே பார்த்துக்கொண்டிருந்தால், ஆப்கானிஸ்தான் நம்மை விட முன்னேறலாம்.

எனவே, பழமையான பொருளாதாரப் போக்கையும், அரசியல் போக்கையும் மாற்ற வேண்டும். தொழில் வாய்ப்புகளை வழங்கி நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் திட்டத்தை, என்னால் மறந்து விட முடியாது.

அரசாங்கம் வழங்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறுங்கள். நாம் செல்ல வேண்டிய புதிய பாதையை முன்னோக்கிக் கொண்டு செல்வது அவசியம். 2022இல் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம், இவ்வளவு குறுகிய காலத்தில் மீண்டு வரும் என்று யாரும் நம்பவில்லை.

இந்நிலை பாதுகாக்கப்பட்டு, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். இம்முறை வெசாக் கொண்டாட்டத்தைக் காண வழமையை விட அதிகமான மக்கள் கொழும்புக்கு வந்திருந்தனர். யாழ்ப்பாணத்திலும் இவ்வருடம் வெசாக் கொண்டாடப்பட்டது. நாட்டின் வளர்ச்சிக்கான மாற்றத்தை நான் செய்து வருகிறேன். அதை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு உங்களிடம் உள்ளது.

தொழில் கேட்பதை விட யார் ஆட்சிக்கு வந்தாலும் எப்படி தொழில் வழங்குவது என்ற கேள்வியை கேளுங்கள். பொய்க் கூச்சல் போடுபவர்களிடம் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு இருக்காது. உங்களது பிரச்சினைகளை முறையாக தீர்க்கும் திட்டத்தை நாங்கள் ஆரம்பித்துள்ளோம். அந்த வேலைத்திட்டத்தில் நம்பிக்கை வைத்து செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன்" எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## இலஞ்சம் வாங்கிய...

இலஞ்சம் அல்லது-ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான- ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த காதி நீதவான் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜாஎல்ல கும்பக்கடுர பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது கணவரிடமிருந்து விவாகரத்து கோரி உடதலவின்ன பகுதியிலுள்ள காதி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பு வழங்குவதற்காகவே அந்த பெண்ணிடம் காதி நீதவான், 4,500 ரூபாய் இலஞ்சம் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான- ஆணைக்குழு உத்தியோகத்தர்களால் உடதலவின்ன காதி நீதிமன்றத்தில் வைத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது சந்தேகத்திற்குரிய காதி நீதவான் கைது செய்யப்பட்டுள்ளார்.

## இயற்கை அனர்த்தங்களால்...

இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் அந்த நிலையம், ஞாயிற்றுக்கிழமை (26) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையின் பிரகாரம், 12,207 குடும்பங்களைச் சேர்ந்த 45,509 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் 19 மாவட்டங்களில் அனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளன. வடக்கில், மன்னார், வவுனியா ஆகிய இரண்டு மாவட்டங்களிலும், கிழக்கில், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் ஊவா மாகாணத்தில் மொனராகலை மாவட்டத்திலும் சீரான வானிலை நிலவுகின்றது.

ஏனைய மாவட்டங்களில் கடுங்காற்று, மரங்கள் முறிந்துவிழுதல், மின்னல் தாக்கம், வெள்ளம் உள்ளிட்ட இயற்றை அனர்த்தங்களால், 12 வீடுகள் முழுமையாகவும், 3,166 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என்றும் அந்த நிலையத்தின் புள்ளிவிபர தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரம் முறிந்துவிழுந்ததை அதில் சிக்குண்டே ஏழு பேர் உயிரிழந்துள்ளனர். முந்தலத்தில் தோணி கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் உயிரிழந்துள்ளார். பலாங்கொடை, காலி- இமதுவ, புத்தளம்- மாதம்பே, ஆராச்சிக்கட்டுவ மற்றும் நாத்தாண்டி, நுவரெலியாவில்-வலப்பனை மற்றும் ஹப்புத்தளையில் மரம் முறிந்துவிழுந்ததில் அதில் சிக்குண்டவர்கள் மரணமடைந்தனர்.

தற்போது நாட்டி நிலவும் சீரற்ற வானிலை இன்னும் சில நாட்களுக்கு நீடிக்குமென வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

## விக்னேஸ்வரனிடம்...

அந்த வகையில், சுகயீனமுற்றுள்ள வடமாகாண சபை முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரனின் நலனை விசாரிக்க, அவருடைய இல்லத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேரில் சென்றார்.

யாழ்ப்பாணத்திலுள்ள விக்னேஸ்வரனின் இல்லத்திற்கு சனிக்கிழமை (25) இரவு சென்ற ஜனாதிபதி, அவரது நலம் விசாரித்ததோடு அவருடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார். அத்தோடு அவர் விரைவில் குணமடைய வேண்டும் என்றும் பிரார்த்தித்தார்.

## ஐ.எஸ்.ஐ.எஸ்க்கு உதவியவர்...

இதன்படி, சந்தேக நபரின் புகைப்படங்களை பொலிஸார் ஊடகங்களுக்கு சனிக்கிழமை (25) அனுப்பிவைத்தர்.

46 வயதான ஜெராட் புஷ்பராஜா ஒஸ்மான் ஜெராட் என அடையாளம் காணப்பட்டுள்ள சந்தேகநபர், தெமட்டகொடை பிரதேசத்தில் வசிப்பவர், எனவும், சுமார் 05 அடி 06 அங்குலம் உயரமுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் குற்றப் புலனாய்வு திணைக்கள பணிப்பாளர் 071-8591753 அல்லது பொறுப்பதிகாரி 071-8591774 என்ற இலக்கத்திற்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார், பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் சரியான தகவல்களை வழங்குவோருக்கு 20 இலட்சம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் எனவும் தகவல் வழங்குபவரின் ரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் எனவும் பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தியாவில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். உறுப்பினர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த இலங்கையர் சுமை தூக்கும் தொழிலாளி (நாட்டாமை) எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர் அண்மையில் மாளிகாவத்தையில் வைத்து பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த 23ஆம் திகதி வெளிநாடு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த 34 வயதுடைய நபரொருவர் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்காகப் பயங்கரவாத புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் ஒருவருடன் அக்குழுவினர் இந்தியா செல்வதற்கு முந்தைய நாள் அவர் தொலைபேசியில் பேசியதும், நெருங்கிய தொடர்பு வைத்திருந்ததும் தெரியவந்தது.

இதன்படி, கொழும்பில் உள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவில் திங்கட்கிழமை (27) மீண்டும் ஆஜராகுமாறு குறித்த நபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் அண்மையில் இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கை ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதிகளின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

நான்கு பேருக்கும் பயங்கரவாதிகளுடன் நெருங்கிய தொடர்பு இருந்ததால், அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க அந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

மேலும், தற்போது குஜராத் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதிகள் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் தொடர்புடையவர்கள் நாட்டினுள் இருக்கின்றார்களா என உறுதிப்படுத்துவதற்காக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# இயந்திரப் படகில் பாதயாத்திரை குழு

■ வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் சந்நதி-கதிர்காம ஜெயாவேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் கொக்கிளாயில் இருந்து இயந்திரப் படகுகள் மூலம் புல்மோட்டைக்கு சனிக்கிழமை (25) வந்திருக்கின்றார்கள்.

சுமார் எட்டு படகுகளில் இருபது நிமிடங்களில் சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தை கடந்தனர். கொக்கிளாயிலிருந்து தென்னமரவாடிக்கு படகுகளில் வந்து அங்கிருந்து 16 கிலோமீட்டர் தூரம் நடந்து புல்மோட்டையை அடைந்தனர்.

தரை வழிப் பாதை எனில், சுமார் 38 கிலோமீட்டர் சுற்றிவர வேண்டிவரும் என்பது குறிப்பிடத்தக்கது.

அக்குழுவினர் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த 11ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. கதிர்காம பாதயாத்திரை பேரவையின் தலைவர் ஜெயாவேல்சாமி தலைமையில் இந்த குழுவினர் வந்து கொண்டிருக்கின்றார்கள் .

மொத்தமாக 124 அடியார்கள் இந்த பாதயாத்திரை குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள்.

இலங்கையின் மிக நீண்ட பாதயாத்திரையான சந்நதி-கதிர்காமம் பாதயாத்திரை ஜெயாவேல்சாமி தலைமையிலான குழுவினர் 15 நாட்களின் பின்னர் கொக்கிளாயை சனிக்கிழமை (25) அடைந்தனர்.

ஞாயிற்றுக்கிழமை (26) திரியாயை அடைந்தனர். இன்று திங்கட்கிழமை (27) நிலாவெளியை அடைவார்கள்.













யாழில் தமிழ் பொலிஸாரை

# கட்டாயப்படுத்தி பிரித் ஓதவைப்பு?

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பகுதியில் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள கெமுனு விகாரையில் நடைபெற்ற வெசாக் வழிபாட்டிற்காக தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தர்களை கட்டாயப்படுத்தி அழைத்து செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை குமார கோவில் வளாகத்தில் கெமுனு விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயமாக இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் குமார கோவில் இருந்தவேளை, ஆலயத்திற்கு முன்பாக இராணுவத்தினரால் கெமுனு விகாரை எந்தவிதமான அனுமதிகளும் பெறப்படாது நிர்மாணிக்கப்பட்டது.

தற்போது குறித்த பகுதிகள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டு அப்பகுதி மக்கள் மீள்குடியேறி குமார கோவிலில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், குறித்த விகாரையில் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் வெசாக் தினத்தில் கொழும்பில் இருந்து பிக்கு ஒருவர் அழைத்து வரப்பட்டு, தமிழில் பிரித் ஓதி வழிபாடுகள் இடம்பெற்றன.

குறித்த வழிபாட்டில் காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கடமையாற்றும் தமிழ் பொலிஸார் கலந்துகொள்ள வேண்டும் என பொலிஸ் உயர் மட்டத்தினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டு, தமிழ் பொலிஸார் வலுக்கட்டாயமாக தமிழில் பிரித் ஓதி வழிபாட்டில் ஈடுப்பட வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பிரச்சினைகளுக்கு

# “24 மணிநேர வரி விதிப்பு தீர்வாகாது”



தற்போது உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் நாட்டின் வருமானத்திற்கும் கூட வரி விதிக்கப்பட்டு வருகிறது. பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புக்கு மட்டுமே தற்போது வரி விதிக்காதுள்ளனர். இவ்வாறான வரிகளை விதிப்பதற்குப் பதிலாக மாற்று வழிகள் பல இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 199ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் அனுராதபுரம், கெக்கிராவ முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு மே 25ஆம் திகதி இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு அரசாங்கத்திடம் எந்த திட்டமும் இல்லை. இதனால் தான் அவர்கள் வரிக்கு மேல் வரி விதித்து வருகின்றனர். பொருளாதாரத்தைச் சுருக்கும் வேலைத் திட்டத்தையே முன்னெடுத்து வருகின்றனர். இத்தகைய சுருங்கிய பொருளாதார கொள்கை முன்னெடுக்கப்பட்டு வருவதால் வரையறுக்கப்பட்ட வருமானத்தையே ஈட்டி வருகின்றனர். இது போதாமையினால் நாட்டின் வருமானத்தை ஈடுகட்ட இஷ்டம் போல வரிவிதித்து வருகின்றனர்.

இந்நாட்டின் பிரச்சினைகளுக்கு 24 மணி நேரமும், தினசரியும், நொடிக்கு நொடியும், வரி விதிப்பது தீர்வாக அமையாது. பொருளாதார வளர்ச்சிக்கான ஏற்பாடுகளே முன்னெடுக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியின் நன்மைகள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

இந்த பொருளாதார வளர்ச்சி அனைவரையும் உள்ளடக்கிய ஒன்றாக அமைந்திருக்க வேண்டும். எனவும் கூறியுள்ளார்.

# பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்



■ நிதர்ஷன் வினோத்

வடக்கு மாகாண கல்வித் துறைக்குள் பட்டதாரிகளை உள்வாங்கும் நோக்குடன் 356 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சனிக்கிழமை (25) வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்,

“ஆசிரியர் பதவிக்கான போட்டி பரீட்சையில் 3,000 பேர் தோற்றிய போதிலும், அவர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட நேர்முக பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட 356 பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனம் இன்று வழங்கி வைக்கப்படுகிறது.

எனினும் ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய இன்னும் இரண்டு வாரங்களில் மீண்டும் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு எஞ்சிய வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். உயர்தர வகுப்புகளுக்கான ஆசிரியர் பற்றாகுறை நிலவுகின்றது.

யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மாணவர்களின் உள நலம் தொடர்பில் சிந்தித்து, புதிய தொழில்நுட்ப முறைகளை கையாண்டு சிறந்த சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும். அரச தொழிலை மாத்திரம் எதிர்பார்க்காத புதிய சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு உங்களிடம் காணப்படுகின்றது” என தெரிவித்துள்ளார்.

யாழ். தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், அமைச்சர் டக்ளஸ் தேவாநந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண அவைத்தலைவர், பட்டதாரிகள் என பலர் கலந்துகொண்டுள்ளனர்.

# சிறுவன், சிறுமி வன்புணர்வு: சிறிய தந்தைகள் கைது



சிறுவன் மற்றும் சிறுமி ஒருவரையும் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினர் என்ற குற்றச்சாட்டின் பேரில், அவ்விருவரின் சிறிய தந்தைகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவங்கள் மொனராகலை மற்றும் வெல்லவாய ஆகிய இரண்டு பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளன.

மொனராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தேகடுவ தெனகல்லந்த பிரதேசத்தில் வசிக்கும் எட்டு வயது சிறுவனை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சிறிய தந்தையை மொனராகலை பொலிஸார் கடந்த (25) கைது செய்துள்ளனர்.

தனது தாத்தாவின் வீட்டில் வசிக்கும் அச்சிறுவனை, தாத்தா இல்லாத பல சந்தர்ப்பங்களில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு பாலியல் வன்புணர்வுக்கு உள்ளான சிறுவன் மருத்துவ பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை மொனராகலை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்த மொனராகலை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி சர்மிந்த சஞ்சீவ விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை, வெல்லவாய பொலிஸ் பிரிவில் வசிக்கும் பதின்மூன்று வயது சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சிறுமியின் சிறிய தந்தை, கடந்த (25) கைது செய்யப்பட்டதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுமியின் தந்தை மற்றும் தாய் வேறு கிராமங்களில் வசிக்கின்றனர். சிறுமி, தன்னுடைய பாட்டியின் அரவணைப்பில் வாழ்ந்து வருகின்றார்.

32 வயதான சிறிய தந்தை, வீட்டில் தனியாக இருந்த சிறுமியைப் பல சந்தர்ப்பங்களில் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுபற்றி பாட்டியிடம் தெரிவித்ததையடுத்து, அவர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், சந்தேக நபர் வெல்லவாய நீதவான் நீதிமன்றில் முன்னிறுத்தப்படவுள்ளார்.

வெசாக் கூடுகளுக்கு

## மின்சாரம் வழங்கியவர் மரணம்

வெசாக் கூடுகளுக்கு மின்சாரம் வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக அனுராதபுரம் - கெப்பத்திகொல்லாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரதன்மடுவ-கபுகொல்லாவை சேர்ந்த, ஒரு பிள்ளையின் தந்தையான 50 வயதுடைய என்.ஏ.பதிராஜ என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விகாரையில் பொருத்தப்பட்டிருந்த வெசாக் கூடுகளுக்கு மின்சாரம் வழங்க முற்பட்ட போதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மின்சாரம் தாக்கியதில் தீக்காயங்களுக்கு உள்ளான குறித்த நபர் சிகிச்சைக்காக கெபத்திகொல்லாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னரே உயிரிழந்துள்ளார் என கெப்பத்திகொல்லாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

SALE OF REGISTERED VEHICLE

| DESCRIPTION | YOM | YARD |
| --- | --- | --- |
| WP KE-XXXX MARUTI WAGON R | 2007 | NO. 375/21/A MAKUMBURA PANNIPITIYA KOTTAWA |
| SG KE-XXXX CHEVROLET AVEO | 2007 | NO. 375/21/A MAKUMBURA PANNIPITIYA KOTTAWA |
| WP LN-XXXX TATA TIPPER | 2017 | NO. 375/21/A MAKUMBURA PANNIPITIYA KOTTAWA |
| NW JJ-XXXX ASHOK LEYLAND WITHOUT BATTERY | 2004 | NO. 375/21/A MAKUMBURA PANNIPITIYA KOTTAWA |

Vehicle inspection daily from 10.00 AM to 2.00 PM Offers are called for the sale of the above vehicle from 27th May 2024 to 31st May 2024 till 2.00 PM. Offer forms are available on non-refundable payment of Rs. 300/- at 135, Galle Road, Wellawatte, Colombo-6. Management reserves the right to cancel or withdraw any offers made in respect of above.

INSPECTION ON PRIOR APPOINTMENT
TEL: 0114 344 380, 0768 371 340, 0778 936 453

# ‘மூளைச்சலவை’ செய்வோரை ஆணிவேறுடன் அறுப்பதே சிறந்தது

இந்தியாவின் அகமதாபாத் சர்வதேச விமான நிலையத்தில் நான்கு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டனர். அந்த நான்கு இலங்கையர்களும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய இவர்கள், தற்கொலைப்படை தாக்குதலுக்குத் தயாராகி இந்தியா வந்துள்ளனர் என செய்திகள் வெளியாகியிருந்தன.

ஈஸ்டர் தாக்குதல்களில் இருந்து இன்றுமே மீண்டெழ முடியாமல் இருக்கின்ற நிலையில், இந்த செய்தி மிகவும் பயமாக இருக்கிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான அனைத்து தகவல்களையும் தாக்குதலுக்கு சில வாரங்களுக்கு முன்பே இலங்கைக்கு அனுப்ப இந்திய உளவுத்துறை நடவடிக்கை எடுத்திருந்தது.

தாக்குதலைத் தடுக்க முடியவில்லை. ஈஸ்டர் தினத்தில் தாக்குதல் நடத்தியவர்களும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பில் ஈடுபட்டது பின்னர் தெரியவந்தது. அதன்பின்னர், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், இலங்கையில் பலரும் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில்தான், இந்தியப் பயங்கரவாத தடுப்புப் பிரிவு அதிகாரிகளின் தீவிர கவனத்தாலும், விழிப்புணர்வாலும் இந்த அமைப்புடன் தொடர்புடைய நான்கு பேரும் அகமதாபாத் சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர். அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அந்த நால்வருக்கும் உதவினார் என்ற குற்றச்சாட்டில் மற்றுமொருவர் கைது செய்யப்பட்டார். மேலுமொருவரை கைது செய்ய, பொதுமக்களின் உதவி நாடப்பட்டுள்ளது.

இந்தியப் பயங்கரவாத புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கிடைத்த தகவல்களை அலட்சியப்படுத்தாமல் இருந்திருந்தால் ஏற்படும் நிலைமையைக் கற்பனை செய்து பார்க்க முடியாது. சில சமயங்களில் அது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர நெருக்கடி வரை நீட்டிக்கப்பட்டிருக்கலாம்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் இருந்து கற்றுக்கொண்ட பாடத்தை ஒருபோதும் மறக்க முடியாது. ஈஸ்டர் தாக்குதல் நடத்தியவர்களுக்கு தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளும் முட்டாள்தனமான பலத்தை அளித்தது. ‘மூளைச்சலவை’ யாரையும் அந்த நிலைக்குக் கொண்டு வந்துவிடும் என்பது தெளிவாகிறது. எனவே இந்த நிலையைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

தேசியப் பாதுகாப்பில் கவனம் செலுத்துவது மற்றொரு தேசத்தை ஒடுக்குவதாகத் தவறாக நினைக்கக்கூடாது. ஆனால், இது போன்ற தவறான வாதங்களை எழுப்பும் அறிஞர்களும் உண்டு. அவர்கள் தேசியப் பாதுகாப்பு நடவடிக்கைகளை குறை மதிப்பிற்கு உட்படுத்துகின்றனர். இப்படி எண்ணற்ற அனுபவங்கள் நம் சமூகத்திற்கு உண்டு.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பில் ஈடுபட்டிருந்த நான்கு இலங்கையர்களும் இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடைய இலங்கையர்களுக்கு வலை விரிக்கப்பட்டுள்ளது. ஆக, ‘மூளைச்சலவை’ செய்யப்பட்டு, சமூகத்தில் உலாவுவோர் இருக்கத்தான் செய்கின்றனர் என்பது புலனாகிறது.


## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வாழ்க்கையில் பல சவால்களை எதிர்நோக்கியேயாக வேண்டும். எல்லாக் காரியங்களுமே சுலபமாக நடக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆனால், எந்த இடர் வந்தாலும் அதனை உடைத்தெறிவதில் தயாராக இருக்கவேண்டும். எந்த இடர்வரினும் துணிவுடன் அதனை உடன் இல்லாதொழிப்பதும் சுவாரஸ்யமானது.

சோர்வை அகற்றுவதும் எதிலும் எதிர்மறை எண்ணங்களைத் தவிர்ப்பதும் வெற்றிகளையும், சவால்களையும் அடைவதற்கு ஏதுவாகின்றது.

ஒருவரின் ஆளுமைகளை உணராமல் மோதுவதும் அவமானப்படுத்த எண்ணுவதும் ஆற்றாமை, துரோகத்தின் வெளிப்பாடு. ஆயினும் நல்லவர்கள் எதிர்ப்பின் மூலம் துணிவுடன் மென்மேலும் பலம் அடைக்கின்றார்கள்.

அரசியலில் சவால்களை எதிர்நோக்கியேயாகவேண்டும். எந்தச் சவால்களையும் பணபலம், ஆட்பலத்தின் மூலம் வெல்ல பிரயத்தனம் எடுப்பார்கள். இது மிகவும் கோரமான அநீதி. வாழக்கையை அழகுடன் அமைக்க முடியும். அதற்கு நேர்மையே முக்கியமானது எதிர்ப்புக்களுக்கு அஞ்சேல்.

- பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நல்லிணக்கத்துக்கான வாய்ப்புக்கள் குறைகின்றனவா?

லக்ஸ்மன்

நாட்டில் நல்லிணக்கம் பற்றியும், சமாதானம் பற்றியும் நாட்டின் எதிர்காலம் பற்றியும் சிந்திக்கும் யாருக்கும் அதனை அடைந்து கொள்வதற்கான தீர்க்கமான வழிமுறைகள் எதுவும் தெரியாதென்றே சொல்ல முடிகிறது. பிரித்தானியரிடமிருந்து நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தது முதல் நடைபெற்று வருகின்ற இன முரண்பாட்டுச் சிக்கல் மேலும் மேலும் வலுவடைகின்ற தன்மை காணப்படுகிறதே தவர அது தணிந்தபாடில்லை என்றே சொல்லவும் முடியும்.

பல்வேறு அமைப்புகளும், நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும், சிவில் சமூகங்களும் நாட்டில் இனப்பிரச்சினையை முடித்து வைப்பதற்கு நல்லிணக்கம் ஒன்றே வழியெனத் தீர்மானம் எடுத்துள்ளன. ஒரு சிலர் மதங்களுக்கு இடையிலான இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். சிலர் சமூகங்களுக்கிடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் நல்லிணக்கத்தை அடைந்து கொள்ளலாம் என்ற வகையில் செயற்படுகின்றனர். ஆனால், இன முரண்பாட்டுச் சிக்கலானது இலங்கை வாழ் மக்களிடையே புரையோடிப்போயிருக்கின்ற தன்மையைச் சரியாக விளங்கிக் கொண்டதாகச் சொல்லமுடியாது எனலாம்.

அரகலய போராட்டத்தின் பயனாக நாட்டின் 225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் தேசியப்பட்டியல் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயோர் உறுப்பினராக இருந்தநிலையிலும் ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். அவரது தெரிவினைத் தொடர்ந்து இலங்கையின் இன முரண்பாட்டுச் சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்துக்கு முன்னர் தமிழ் மக்களது பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்ற கோதாவில் பல கருத்துக்களை வெளியிட்டார்.

இதனையடுத்து, தமிழ் அரசியல் தரப்பினரின் ஒற்றுமையின்மை குறித்த கருத்தொன்றை முன்வைத்தார். ஆனால்,சுதந்திர தினம் நடைபெற்றது. அவர் சொன்னதுதான் நடைபெறவில்லை. அதே போன்று பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கப் பாடுபடப்போவதாகவும் கூறினார்.

ஆனால், பின்னரான காலங்களிலிருந்து தான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டது இலங்கையை அதன் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கே என்ற கருத்துக்களையே தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்தார். இப்போது உருவாகியிருக்கின்ற ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் சலசலப்பு காலங்களிலும் அவர் இதனையொட்டிய கருத்தாக்களையே வெளிப்படுத்தி வருகிறார். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்கும் கடப்பாட்டை நிறைவேற்ற தன்னால் இயன்றவரைப் பாடுபடுவதாகவும் தெரிவிக்கிறார். இனப் பிரச்சினை விடயத்தினை மறந்துவிட்டாரா என்பது இந்த இடத்தில் தொக்கி நிற்கிறது.

காலங்காலமாகப் புரையோடிப்போயிருக்கின்ற இனப் பிரச்சினையானது மென்மேலும் நாட்டை பாதாளத்துக்குள்ளேயே தள்ளிவிடும் என்பதனை உணராதவர்களாகச் செயற்படுகின்ற தலைவர்களுடைய பட்டியலில் ரணில் விக்ரமசிங்கவும் சேர்க்கப்படும் நிலை இதனால் உருவாகலாம்.

பொருளாதார வெற்றியைச் சாதிப்பதற்கு மும்முரமாக ஈடுபடும் ஜனாதிபதி தனது நோக்கங்கள் குறித்து மாத்திரமே சிந்திக்கிறாரே தவிர, மக்களால் விரும்பப்படாத கொள்கைகளால் மக்களிடம் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் பற்றிக் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. அவ்வாறான கொள்கையைப் பின்பற்றும் அவர், நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு நல்லிணக்கம் போன்றவற்றில் மக்கள் விரும்பும், ஏற்றுக்கொள்ளும் நடைமுறைகளையே பின்பற்ற வேண்டும் என்று சிந்திக்கிறார் என்று நோக்கத் தோன்றுகிறது.

இருந்தாலும், அவருடைய பொருளாதார ரீதியான கொள்கைகள் மக்களுடைய மனங்களில் பாதகமான பிரதிபலிப்பை அரசியல் ரீதியாகத் தராது என்ற ரீதியிலும், இனப்பிரச்சினை சார்ந்த விடயங்கள் குறித்த அவருடைய முயற்சிகள் பெரும்பான்மை மக்களிடம் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதனால் அதனைத் தீவிரமாக முன்னெடுப்பதில் அவர் நழுவல் போக்கைக் கடைப்பிடிக்கிறார் என்பதும் வெளிப்படையாகவே தெரிகின்றன. ஆனால், நாட்டில் பொருளாதார ஸ்திரத் தன்மை எவ்வளவுக்கு முக்கியமானதோ இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமும் முக்கியமானது என்பதனை அவர் மறந்துவிடக்கூடாது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணவேண்டிய கடப்பாடு தனக்கு இருக்கிறது என்று தான் உணர்வதாகவும் எதிர்காலச் சந்ததிகளுக்கு ஒரு சுமையாக அந்த பிரச்சினையை விட்டுச் செல்லப்போவதில்லை என்றும் கூறிய ஜனாதிபதி உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். ஆதற்காக இடைக்காலக் குழு ஒன்றையும் நியமித்தார். அந்த இடைக்காலச் செயலகம் ஏதோ செயற்பட்டு வருகிறதென்றாலும் இதுவரை தீர்க்கமான விடயங்கள் எதுவும் நடைபெறவில்லை என்றே கூறமுடியும்.

நான்கு தசாப்தங்கள் வரையில் நாட்டில் நடைபெற்ற போரின் விளைவாக நாடு பொருளாதாரம், சமூக ஒற்றுமை, வாழ்வாதாரம், இனங்களுக்கிடையிலான இணக்கப்பாடு, வெளிநாட்டு முதலீடுகள் என அனைத்து விடயங்களிலுமே உறுதிப்பாடற்ற தன்மையினையே அடைந்திருந்தது. காகம் இருக்க பனம் பழம் விழுந்த கதையாக கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் அது நிகழ்ந்ததாகவும் சொல்லமுடியும். ஆனால், முழுப் பழியையும் சுமக்க வேண்டியவராக அவர் மாறிப்போனார்.

போரின் காரணமாக வெளிநாட்டு முதலீட்டையும் அதனால் அடையக்கூடிய அபிவிருத்தியையும் இலங்கை இழந்தது என்பது மிகையான கூற்று அல்ல. இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்துக் கடந்த காலத்தில் பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன என்று கூறிய ஜனாதிபதி அந்த முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டு ஆனால், அவற்றினால் எந்தப்பயனும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு தடவைகளிலும் நாட்டின் தலைவர்களாக இருந்தவர்கள் அந்தவகையில் தோற்றவர்களாகவே கொள்ளப்பட முடியும்.

சிறிமா சாஸ்திரி, டட்டி செல்வா, பண்டா, செல்வா என ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஜனாதிபதிகள், சமாதானப்புறாவாக தமிழ் மக்களால் வர்ணிக்கப்பட்ட சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க, நல்லாட்சி கால ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன ஆகியோருடன் யுத்தத்தை வென்றவராக வர்ணிக்கப்படுகின்ற மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தோற்றவர்களாகவே கொள்ளப்பட வேண்டும். அதே போன்றே ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்தால் அவரும் இந்தப்பட்டியலில் சேர்க்கப்படலாம். அவருடைய வெற்றி எதிர்பார்ப்பு ஒருவேளை சாத்தியமானால் அடுத்த தடவையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைப்பேன் என ஒரு புருடாவையும் அவர் விடக்கூடும்.

கடந்த இரு வருடங்களாக இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் சர்வதேச அரங்குகளிலும் உள்நாட்டு அரங்கிலும் தன்னுடைய நிலைப்பாட்டினை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெளிப்படுத்தியிருக்கிறார். அரசியல் தீர்வுக்கு அவசியமான அம்சங்களைக் கருத்தில் கொண்டு அவருடைய நல்லிணக்கச் செயற்பாடு இருப்பது இந்த இடத்தில் அவசியமாகும். துரதிர்ஷ்டமாகப் பெரும்பான்மை மக்களிடம் அது சார்ந்த சாதகமான மனோநிலையைக் காணவில்லை.

இந்த இடத்தில் தான், கடந்த வாரத்தில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்களின் போது அரச பாதுகாப்புத் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்ட தடைகள் ஜனாதிபதியினுடைய நல்லிணக்கச் சிந்தனைக்கு முட்டுக்கட்டையாக இருப்பதனைக் காணமுடியும். அந்தவகையில்தான், ஜனாதிபதிக்கும் பாதுகாப்புத் துறையினருக்கும் தொடர்பில்லையா என்ற கேள்வியும் எழுகிறது.

அதே நேரத்தில், போரின் இறுதிக்கட்டத்தில் இறந்துபோன தங்களது அன்புக்குரியவர்களைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவுகூருவதைத் தடுப்பதற்கு பொலிஸார் கையாண்ட மோசமான அடாவடித்தனமானது கொடூரமானது என்பதுடன், அவர்களுடைய மனோநிலையை வெளிப்படுத்துவதுமாகும்.

நல்லிணக்கம் மற்றும் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலான நன்முயற்சிகள் அற்று தமிழ் மக்களை மேலும் துன்பத்துக்குள்ளும், நெருக்குதல்களுக்குள்ளும் வைத்திருக்கின்ற மனோநிலையிலுள்ள பெரும்பான்மை அடிப்படைவாதிகள் எவ்வாறு ரணில் விக்ரமசிங்கவுடைய சிந்தனைக்கு வழிவிடுவார்கள் என்ற சந்தேகமும் எழுகிறது. அவ்வாறானால் நல்லிணக்கத்துக்கான வாய்ப்புக்கள் குறைவடைகின்றன என்றே கொள்ள மூடியும். இது நாட்டுக்குப் பாதகமான நிலையையே ஏற்படுத்தும் என்பதும் நிச்சயமானது.

அதே நேரத்தில், இந்த நிலைமையினை உணர்ந்து தான் ஜனாதிபதி தன்னுடைய கருத்துக்களைத் தமிழ் மக்களையும் சர்வதேச மற்றும் புலம்பெயர் தரப்புக்களையும் ஆசுவாசப்படுத்துவதற்காக வெளியிடுகிறாரா என்ற நியாயமான சந்தேகமும் தோன்றுகிறது. இதனை மாற்றியமைப்பதும் எதிர்காலத்துக்காகப் பாடுபடுவதும் ஜனாதிபதியின் கைகளிலேயே உள்ளது என்பது மாத்திரமே இறுதியானது.

## கடிதங்கள்

### மரக்கிளைகளை தரிக்கவும்

தற்போது நாட்டில் நிலவும் மிக மோசமான வானிலை காரணமாக, பல பிரதேசங்களில் நான்கு நாட்களுக்கு மேலாக மின்சாரம் தடைப்பட்டுள்ளது. இந்த தடையால், கிணறுகளில் இருந்து நீர் பம்பிகளின் ஊடாக நீரைப் பெற்றுக்கொள்வோரும் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

மழையுடன் கூடிய சீரற்ற வானிலை காரணமாக, மாலைவேளைகளில் மிகச் சீக்கிரமாகவே இருட்டாகிவிடுகின்றது. இதனால் வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட சிறுசிறு கடைகளை வெகு விரைவிலேயே மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

திடீரென மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டமையால், முன்னாயத்தங்கள் எவற்றையும் செய்யவில்லை என்றும், பற்றவைக்கும் மெழுகுவர்த்திகளும் பலத்த காற்றினால் திடீர், திடீரென அணைந்து விடுகின்றன என்றும் குற்றச்சாட்டுகின்றனர்.

பருவ மழைக்கு முன்னரே, மின் தடங்களை அண்மித்து இருக்கும் மரக்கிளைகளை வெட்டி அகற்றும் நடவடிக்கையை இலங்கை மின்சார சபை முன்னெடுக்கும். எனினும், பாரிய மரங்கள் முறிந்து, மின் தடங்களில் விழுந்தமையால் ஒருசில பிரதேசங்களில் மின் விநியோகத்தைச் சீர்செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையினர் தெரிவிக்கின்றனர்.

ஆகையால், முன்கூட்டிய நடவடிக்கையை முன்னெடுக்குமாறும், மின் துண்டிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் மின்னிணைப்பை ஏற்படுத்தி, நிலைமையை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கையில் ஈடுபடுமாறும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- அன்பழகன் குமாரலிங்கம்







# வரலாற்று தடம் பதித்த பெருந்தலைவர்

## அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 4ஆவது சிரார்த்த தினம்

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அமரர். ஆறுமுகன் தொண்டமானின் நான்காவது சிரார்த்த தினம் மே 26 அனுஷ்டிக்கப்பட்டது. இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்கு இரு தசாப்தங்களாக அரசியல் தலைமைத்துவத்தை வழங்கி வந்த பன்முக ஆளுமையுடன் மலையகத் தமிழர்களுக்கு 'ஆறுமுகன்' என்ற ஒரு தலைமைத்துவம் திடீரென மறைந்து நான்கு ஆண்டுகள் மிகவிரைவில் உருண்டோடிவிட்டன.

1815இல் கண்டி இராச்சியத்தை பிரித்தானியர் கைப்பற்றிய பின்னர், மலையகமெங்கும் வெள்ளையர்களின் ஆதிக்கம் கோலோச்சியது. எல்லா விடயங்களும் அவர்களின் கட்டளையின்படியே அரங்கேறின.

1824இல் ஜோர்ஜ் பேர்ட் என்பவரால் இலங்கையில் கம்பளை, சிங்ஹாபிட்டியவில் கோப்பி பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. காலப்போக்கில் ஒருவகையான நோய்த்தாக்கத்தால் கோப்பி பயிர்ச்செய்கை முற்றாக அழிவடைந்தது.

இதையடுத்தே ஜேம்ஸ் டெய்லர் என்பவரால் 1867இல் லூல் கந்தரா எனும் இடத்தில் தேயிலை பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

1827இலேயே தென்னிந்தியாவிலிருந்து முதலாவது தொழிலாளி இலங்கையை வந்தடைந்தார் என கூறப்பட்டாலும், தேயிலைப் பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே கொத்துக் கொத்தாக வந்து குவிந்தனர் என தரவுகள் தெரிவிக்கின்றன.

கரையோரப் பகுதிகளிலிருந்து கால்நடையாக மலையகப் பகுதிகளுக்குச் சென்ற மக்கள் பல இடங்களிலும் அடிப்படைவசதிகள்கூட இன்றி குடியமர்த்தப்பட்டனர். வெள்ளையர்களின் நிர்வாகத்தின்கீழ் மலையகத் தமிழர்கள் அடிமைகளாகவே வழிநடத்தப்பட்டனர். உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படவில்லை. தொழிற்சங்கம் அமைக்கும் உரிமைகூட மறுக்கப்பட்டது. இப்படிப் பல கொடுமைகளைப் பட்டியலிட்டுக்கொண்டே போகலாம்.

இலங்கை, இந்தியக் காங்கிரஸ் உதயமும்குடியுரிமை பறிப்பும் இலங்கையில் வாழ்ந்த இந்திய வர்த்தகர்கள், தொழிலாளர்கள், அரச பதவிகளில் இருந்தவர்களுக்கு எதிராக நெருக்கடிகள் வலுத்ததால், இது தொடர்பில் கண்காணிப்பதற்குத் தனது விசேட பிரதிநிதியாக நேருவை, 1939ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலங்கைக்கு அனுப்பிவைத்தார் காந்தி.

கொழும்பில் செயற்பட்ட இந்திய அமைப்புகளிடையே ஒற்றுமை இருக்கவில்லை. இதை உணர்ந்த நேரு அனைவரையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் இறங்கினார்.

இழுபறிக்கு மத்தியில் 1939 ஜூலை மாதம் 24ஆம் திகதி இறுதிக்கட்ட பேச்சுகள் நள்ளிரவு தாண்டியும் நடைபெற்றது. பிளவுபட்டிருந்தவர்களெல்லாம் ஓரணியில் திரண்டனர். இதன் பிரதிபலனாக இலங்கை, இந்தியக் காங்கிரஸ் உதயமானது.

இந்திய வம்சாவளி மக்களுக்கான அரசியல் இயக்கமாகவும் செயற்பட்டது. புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு இவ்வமைப்பு சற்று ஆறுதலாக இருந்தது. இவ்வமைப்பே தற்போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸாகச் செயற்பட்டுவருகின்றது.

இலங்கையில் 1947இல் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் தனித்து களமிறங்கிய இலங்கை, இந்தியக் காங்கிரஸ் சிறந்த வெற்றியைப் பதிவுசெய்தது. அமரர். சௌமியமூர்த்தி தொண்டமான் உட்பட 7 பேர் பாராளுமன்றம் தெரிவானார்கள்.

பொதுத்தேர்தலின் பின்னர் அமைந்த முதலாவது பாராளுமன்றத்திலேயே அதாவது 1948இல் பிரஜா உரிமை சட்டத்தின்கீழ் மலையகத் தமிழர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. அதன்பின்னர் தேர்தல் திருத்தச் சட்டமூலம் ஊடாக வாக்குரிமையும் மறுக்கப்பட்டது. இதனால் மலையகத் தமிழர்கள் அரசியல் ரீதியில் அநாதைகளாக்கப்பட்டனர்.

டி.எஸ்.சேனாநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த துரோக- அடாவடிச் செயலுக்கு அரசின் பங்காளிக்கட்சியாக இருந்த தமிழ் காங்கிரஸூம் துணைநின்றது. எனினும் தந்தை செல்வா இதனைக் கடுமையாக எதிர்த்தார். வன்மையாகக் கண்டித்தார். மலையகத் தமிழர்களுக்காகத் துணிகரமாகக் குரல் கொடுத்தார். இறுதியில் தமிழ் காங்கிரசஸூடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அரசாங்கத்திலிருந்தும் வெளியேறினார். தந்தை செல்வாவுக்கு ஆதரவாக மேலும் சிலர் அவர் பின்னால் அணி திரண்டனர்.

இந்நிலையில், 1949 டிசெம்பர் 18ஆம் திகதி தந்தை செல்வா தலைமையில் 'சமஷ்டி கட்சி' உதயமானது. காலப்போக்கில் இலங்கை தமிழரசுக் கட்சியாகப் பெயர் மாற்றம் பெற்றது. தனித்து நின்று போராடிய தொண்டமான் 1949களில் இலங்கை குடியுரிமை கோரி விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு மாத்திரமே அனுமதி கிடைத்தது. அதன்பின்னர் 1964இல் கைச்சாத்திடப்பட்ட சிறிமா -சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் 5 இலட்சத்து 25 ஆயிரம் மலையகத் தமிழர்களை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் 3 இலட்சம் 25 ஆயிரம் பேருக்கு 1964இற்கும் 79இற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் இலங்கையில் குடியுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது. இதனால் சொந்தங்கள் பிரிக்கப்பட்டன. பாதி பேர் இந்தியாவுக்கும், மீதி பேர் இங்கேயும் வாழ்ந்தனர். குடியுரிமையையும், வாக்குரிமையையும் பெறுவதற்குப் போராட்டங்கள் தொடர்ந்தன.

இதற்கிடையில் ஐக்கியமாக இருந்த மலையக அரசியல் தலைவர்களுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டன. முதலில் அமரர் அஸீஸ் காங்கிரஸில் இருந்து வெளியேறினார். அதன்பின்னர் அமரர் வெள்ளையன், சி.வி.வேலுபிள்ளை என சிலர் வெளியேறி புதிய சங்கங்களை உருவாக்கினர். எனினும், சௌமியமூர்த்தி-தொண்டமான் தளரவில்லை. காங்கிரஸை வழிநடத்தினார்.

1960 சிறிமாவோ ஆட்சியிலும், 65இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியிலும் சௌமியமூர்த்தி தொண்டமானுக்கு தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்பட்டது.

1977இல் நடைபெற்ற தேர்தலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்து சேவல் சின்னத்தில் போட்டியிட்டது. நுவரெலியா தொகுதியில் 35 ஆயிரத்து 743 வாக்குகளைப் பெற்று சௌமியமூர்த்தி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தார். 1947இற்கு பிறகு வாக்குரிமைமூலம் மலையக பிரதிநிதியொருவர் பாராளுமன்றம் சென்ற சந்தர்ப்பம் இதுவாகும்.

1982இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அமரர் ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு ஆதரவு வழங்கிய சௌமியமூர்த்தி தொண்டமான், மலையக மக்களுக்குக் குடியுரிமை பெறுவதில் குறியாக இருந்தார். பல அழுத்தங்களுக்கு மத்தியில் 1988இல் குடியுரிமை மற்றும் வாக்குரிமை மலையக மக்களுக்குக் கிடைத்தது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் வரலாற்றில் இதுவே மகத்தான வெற்றியாகப் பார்க்கப்படுகின்றது. இந்த விடயத்தை வைத்தே இயன்றளவிலும் அரசியல் நடத்தப்படுகின்றது. அமரர். சௌமியமூர்த்தி தொண்டமானை இந்த விவகாரத்தை அடிப்படையாகக்கொண்டே மலையக தந்தை என அழைக்கின்றனர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வடக்கு தமிழ்க் கட்சிகளுடன் இணைந்தே செயற்பட்டுவந்தது. 1972இல் உதயமான தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியிலும் இணைத் தலைமை பதவியை வகித்துள்ளார். எனினும், வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பின்னர் உறவில் விரிசல் ஏற்பட்டது.

இ.தொ.காவும், பொதுத்தேர்தல்களும்

1989 பெப்ரவரி 15ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் யானை சின்னத்தின்கீழ் போட்டியிட்டது. இ.தொ.காவின் வேட்பாளர் முத்து சிவலிங்கம், வீ.அண்ணாமலை ஆகியோரும் தோல்வியைத் தழுவினர். எனினும், ஐ.தே.க. ஆட்சியில் இ.தொ.காவுக்கு இரண்டு தேசியப்பட்டியல்கள் வழங்கப்பட்டன.

சௌமியமூர்த்தி தொண்டமானும், பிபி தேவராஜும் பாராளுமன்றம் சென்றனர். அமைச்சரவையிலும் இடம்பிடித்தனர். 1989இல் நுவரெலியா மாவட்டத்தில் சுயேச்சையாகப் போட்டியிட்ட சந்திரசேகரனாலும் வெற்றிபெறமுடியாமல் போனது. 1994 ஒகஸ்ட் 16 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தே இ.தொ.கா. போட்டியிட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.கா. பட்டியலில் போட்டியிட்ட முத்து சிவலிங்கம் 85 ஆயிரத்து 490 வாக்குகளையும், சுப்பையா சதாசிவம் 83 ஆயிரத்து 368 விருப்பு வாக்குகளையும், ஆறுமுகன் தொண்டமான் 75 ஆயிரத்து 297 விருப்பு வாக்குகளையும் பெற்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் சுயேச்சையாகக் களமிறங்கிய மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் பெரியசாமி சந்திரசேகரன் 23,453 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்.


சந்திரிக்கா தலைமையிலான மக்கள் கூட்டணி 14 போனஸ் ஆசனங்கள் சகிதம் 105 ஆசனங்களே கைவசம் இருந்தன. இந்நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேசக்கரம் நீட்டியது. (6+1) ஏழு ஆசனங்கள்.

இதனால் ஆட்சியமைப்பதற்கு (113) சந்திரிக்காவுக்கு மேலுமொரு ஆசனம் (எம்.பியின் ஆதரவு) தேவைப்பட்டது. இதன்போதே ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக சந்திரசேகரன் உருவெடுத்தார். சந்திரிக்காவுக்கு ஆதரவு வழங்கினார். பின்னர் பிரதி அமைச்சுப் பதவியும் வழங்கப்பட்டது.

தேர்தலின் பின்னர் மக்கள் கூட்டணியில் இணைந்துகொண்ட இ.தொ.காவின் தலைவருக்கு சந்திரிக்காவின் அமைச்சரவையில் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது.

பேரன் தொண்டமானின் பதவியேற்பும்

1999 ஒக்டோபர் 30ஆம் திகதி சௌமியமூர்த்தி-தொண்டமான் உயிரிழந்தார். இ.தொ.காவில் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் இருந்தனர். எனினும், தலைமைப் பதவியை-ஆறுமுகன் தொண்டமான் பொறுப்பேற்றார். இதனால் இ.தொ.காவுக்குள் மோதல் உருவெடுத்தது. மூத்த உறுப்பினர்கள் சிலர் வெளியேறி புதுக்கட்சி துவங்கினர். தொண்டர்களும் கதிகலங்கி நின்றனர்.





### சேவைத் துறையின் முன்னேற்றத்திலும்

# கவனம் செலுத்தல் அவசியம்



ச.சேகர்




இலங்கையின் பொருளாதாரம் கடன்களின் அடிப்படையில் தங்கியுள்ளது, மாறாக உற்பத்தியில் தங்கியிருக்கும் பொருளாதாரமாக மாற்றப்பட வேண்டும் என பல பொருளாதார நிபுணர்கள் தமது கருத்துகளை வெளியிட்ட வண்ணமுள்ளனர். தேர்தல் நெருங்கி வரும் காலப்பகுதியில், இதுவரையில் முன்னெடுக்கப்பட்டுள்ள கருத்துக் கணிப்புகளின் பிரகாரம், பொது மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ள அரசியல் கட்சியான தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களும் இதே கருத்தை பல ஊடகங்களில் பிரசாரப்படுத்திய வண்ணமுள்ளனர். ஆனாலும், இந்த உற்பத்திசார் பொருளாதாரம் என்றால் என்ன விளக்கமளிக்குமாறு கோரிய போதிலும், பலர் அதற்கான சரியான பதிலை வழங்கத் தவறுகின்றனர்.

பொருளியலில் உற்பத்திசார் பொருளாதாரம் என்பதற்கு வரைவிலக்கணம் இல்லை என்பதே உண்மை. பொருளியலுக்கு முரணான வகையில் தேசிய மக்கள் சக்திசார் ஆதரவாளர்கள் கருத்துகளை முன்வைப்பது இது முதல் தடவையல்ல. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் காலப்பகுதியில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் விடுதலை முன்னணி ஆதரவளித்து பிரச்சாரம் செய்த போதும், சமநிலையான பொருளாதாரம் என்பது தொடர்பான வாக்குறுதியை பொது மக்களுக்கு வழங்கியிருந்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் நிலைப்பாடு, கடந்த கால செயற்பாடுகளை எடுத்து நோக்குகையில், எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் ஆணையைப் பெற்று ஆட்சி பீடம் ஏறினால், விவசாயம் மற்றும் தொழிற்துறைசார் துறைகளுக்கு முக்கியத்துவமளித்து, கடந்த ஆண்டில், நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 60 சதவீதம் பங்களிப்பு வழங்கிய சேவைத் துறை போன்றவற்றுக்கு முக்கியத்துவமளிக்காது என எண்ணத் தோன்றுகின்றது. தொழிற்துறையிலும் உற்பத்தித் துறையில் அதிகளவு கவனம் செலுத்துவார்கள் போலும். உற்பத்திசார் பொருளாதாரக் கொள்கை பற்றி கருத்து வெளியிடுவோர், வங்கியியல், காப்புறுதி, ஹோட்டல் மற்றும் விருந்தோம்பல், சரக்குக் கையாளல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினித்துறை போன்ற சேவைத் துறைகளில் அதிகளவு நாட்டம் கொண்டிருக்கவில்லை எனவே தோன்றுகின்றது.

காணி, ஊழியர் மற்றும் மூலதனம் ஆகிய காரணிகளை அடிப்படைகளாகக் கொண்டே உற்பத்திச் செயன்முறை மேற்கொள்ளப்படுகின்றது. பொருட்கள் உற்பத்திக்கு மாத்திரம் இவை பயன்படாமல், சேவைத் துறைகளுக்கும் இது இன்றியமையாததாகின்றது. எனவே, குறிப்பிட்ட காலமாக நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் பெருமளவு பங்களிப்பு வழங்கும் சேவைத் துறை தொடர்பில் கவனம் செலுத்தாமல் விடுவது என்பது நடைமுறை சாத்தியமான வகையில் ஏற்றுக் கொள்ள முடியாததாகவும், அசல் உற்பத்தி என்பதில் கொள்கை அடிப்படையில் தவறான கருத்தைத் தோற்றுவிப்பதாகவும் அமைந்துள்ளது.

உலகின் மாபெரும் பொருளாதாரம் என கருதப்படும் அமெரிக்காவின் பொருளாதாரத்தில் 80 சதவீதத்தை சேவைத் துறை கொண்டுள்ளது. தமது பொருளாதார கட்டமைப்பில் விவசாயம் மற்றும் தொழிற்துறைகளுக்கு முக்கியத்துவமளிக்காமை என்பது தொடர்பில் அமெரிக்காவின் எவரும் பெருமளவில் அக்கறை கொள்வதில்லை. 1977ஆம் ஆண்டில் நாட்டில் திறந்த பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றத் தொடங்கியதிலிருந்து சேவைத் துறையின் முக்கியத்துவம் என்பது நாட்டில் அதிகரித்துள்ளது. சுதந்திரம் பெற்ற போது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தில் 34 சதவீத பங்களிப்பை மாத்திரம் வழங்கியிருந்த நிலையில், இந்தப் பங்களிப்பு அரைப் பங்குக்கு அதிகமாக அதிகரித்துள்ளது. தொழில்நுட்பம் மற்றும் போக்குவரத்து போன்றவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் காரணமாக, சேவைகள் என்பது வியாபாரமாகக் கருதப்படலாம். அவற்றை நாடு கடந்து முன்னெடுக்கக்கூடிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியிலும் சேவைகள் துறை முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன. உலகின் மாபெரும் சேவைகள் ஏற்றுமதியாளராக இந்தியா திகழ்கின்றது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு தொழிற்துறை மயமாக்கம் மட்டுமே பொருளாதார அபிவிருத்திக்கு வழிகோலும் என்பது தவறான கொள்கை என்பதற்குச் சிறந்த உதாரணமாகவும் அமைந்துள்ளது.

விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளிலிருந்து பெறப்படும் விளைச்சல்களை விற்பனை செய்வதற்கு வங்கியியல், காப்புறுதி மற்றும் சரக்குக் கையாளல் போன்ற சேவைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. கிழக்கு, மேற்கு வர்த்தக பாதையின் கேந்திரப்பகுதியில் இலங்கை அமைந்திருப்பதாலும், எதிர்காலத்தில் பொருளாதார ரீதியில் வலுப்பெற்ற ஜாம்பவானாகத் திகழும் இந்தியாவை அண்மைத்து காணப்படுவதாலும், பிராந்தியத்தில் சரக்குக் கையாளலுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இலங்கை அமைந்துள்ளது. இதனால் சேவைகள் துறையினூடாக ஏற்றுமதி வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் பெருமளவு வாய்ப்புகளைக் கொண்டுள்ளது. இவ்வாறு சேவைகள் துறை தொடர்பில் கவனம் செலுத்தாமல், இன்னமும் விவசாயம் மற்றும் தொழிற்துறை தொடர்பில் பேசிக் கொண்டிருப்பவர்கள், நவீன, சர்வதேச பொருளாதாரத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் போதியளவு அறிவைக் கொண்டிருக்கவில்லை அல்லது அவை தொடர்பில் அக்கறை கொண்டிருக்கவில்லை எனவே எண்ணத் தோன்றுகின்றது.

1977இல் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகத்துடன் நாட்டின் உற்பத்திசார் பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டது என தற்போதும் குரலெழுப்பும் சில குறுகிய மனப்பான்மை கொண்டவர்களுக்கு, இலங்கையில் பாதுகாப்பு வாதம் என்பது பல தடவைகள் முயற்சிக்கப்பட்டது தோல்வியைத் தழுவிய முறைமையாக அமைந்திருப்பதுடன், ஒரு சில வியாபாரிகள், வர்த்தகர்களுக்கு மாத்திரம் போட்டியின்றி வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய முறையாகவும் அமைந்துள்ளது. நலிந்த மற்றும் கொள்கை ரீதியில் ஏற்றுக் கொள்ள முடியாத முறைமைகள் நாட்டுக்கு அர்த்தமுள்ள முன்னேற்றத்தை ஏற்படுத்தமாட்டா.

புதுடெல்லி, குஜராத்

புதுடெல்லி மற்றும் குஜராத்தில்

# அடுத்தடுத்து தீ விபத்து





புதுடெல்லி மற்றும் குஜராத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட தீவிபத்துகளில் சிக்கி, குழந்தைகள் உட்பட பலபேர் பலியாகியுள்ளமை நாட்டையே பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

புதுடெல்லி விவேக் விஹாரில் உள்ள குழந்தைகள் மருத்துவமனையில் ஏற்பட்ட தீ விபத்தில் தீயில் கருகி 7 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர்.

கிழக்கு டெல்லியில் விவேக் விஹார் பகுதியில் உள்ள குழந்தை பராமரிப்பு மைய மருத்துவமனையில், கடந்த சனிக்கிழமை (25) இரவு 11.30 மணியளவில் பரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது. சற்று நேரத்திலேயே அந்த தீ மருத்துவமனை முழுவதும் வேகமாக பரவ ஆரம்பித்துள்ளது.

இது குறித்து உடனடியாக தீயணைப்புத் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்திற்கு 16 தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்து குழந்தைகளை மீட்கும் பணியில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. இதன்மூலம் மருத்துவமனையில் முதல் தளத்திலிருந்து 12 குழந்தைகள் மீட்கப்பட்ட நிலையில், சிகிச்சை பெற்றுவந்த 7 குழந்தைகள் தீயில் கருகி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்துள்ளதாக கூறப்படும் 7 குழந்தைகளுமே, பிறந்த சில தினங்களேயானது என கூறப்படுகிறது.

இந்நிலையில், குஜராத் மாநிலம் ராஜ்கோட் நகரில் உள்ள சிறுவர் விளையாட்டு பொழுதுபோக்கு மையத்தில், கடந்த சனிக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது. இதில், 9 பேர் 16 வயதுக்கு உட்பட்டோர் ஆவர்.

குஜராத்தின் ராஜ்கோட் நகரில் 'டிஆர்பி கேம்' என்ற பெயரில் சிறார்களுக்கான விளையாட்டு பொழுது போக்கு மையம் உள்ளது.

கோடை விடுமுறை என்பதால் அந்த மையத்தில் நேற்று ஏராளமான சிறுவர், சிறுமியர் குவிந்திருந்தனர். மாலையில் விளையாட்டு மையத்தின் தரைத்தளத்தில் மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டது.

இந்த தீ மளமளவென பரவி விளையாட்டு மையத்தின் 4ஆவது மாடி வரை கொழுந்துவிட்டு எரிந்தது. சுமார் 5 கி.மீ. தொலைவு வரை கரும்புகை சூழ்ந்தது.

இந்த தீ விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 33 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 9 பேர் 16 வயதுக்கு உட்பட்டோர் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.




எஃப்.ஏ. கிண்ணத் தொடர்:

# சிற்றியை வீழ்த்தி சம்பியனான யுனைட்டெட்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சங்க (எஃப்.ஏ.) சவால் கிண்ணத் தொடரில் மன்செஸ்டர் யுனைட்டெட் சம்பியனானது.

வெம்ப்ளியில் சனிக்கிழமை(25) நடைபெற்ற மன்செஸ்டர் சிற்றியுடனான இறுதிப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்றே யுனைட்டெட் சம்பியனானது.

யுனைட்டெட் சார்பாக, அலெஜான்ட்ரோ கராஞ்சோ, கொபி மைனோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜெரெமி டோக்கு பெற்றிருந்தார்.

சென்னை

உலக பட்டினி தினத்தில்

# மதிய உணவு

**விஜய் கட்சி அறிவிப்பு**

உலக பட்டினி தினத்தை முன்னிட்டு (மே 28) தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளில் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ஏழை, எளிய மக்களுக்கு மதிய உணவு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் அறிவுறுத்தலின் படி, பட்டினியில்லா உலகத்தை ஏற்படுத்த வேண்டும், அனைவருக்கும் உணவு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி உலகப் பட்டினி தினமான மே 28ஆம் திகதி தமிழகம் முழுவதும் அனைத்துச் சட்டப்பேரவை தொகுதிகளிலும் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இதல் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் உரிய விதிமுறைகளை பின்பற்றிப் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி, மக்கள் நலப்பணியில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்" என கூறப்பட்டுள்ளது.

சேலம்

ஐஸ்கிரீமில் விஷம்:

# குழந்தைகளுடன் தாய் விபரீத முடிவு

குழந்தைகளுக்கு ஐஸ்கிரீமில் விஷம் வைத்துக் கொடுத்துவிட்டு தாய் தன்னுயிரை மாய்த்துக் கொண்ட சம்பவத்தில் கணவர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்து கைது செய்துள்ளனர்.

சேலம் மாவட்டத்தின் அக்ரஹாரம் பகுதியைச் சேர்ந்தவர் கோகுல். இவருடைய மனைவி சுகமதி. இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். முச்சக்கரவண்டி சாரதியான கோகுல் வாங்கிய கடனை கட்டுவது தொடர்பாக மனைவி சுகமதி அடிக்கடி சண்டையிட்டு வந்துள்ளார்.

ஒரு கட்டத்தில் கோகுலைத் தாக்கியுள்ளார். இதனால் கணவர் வீட்டை விட்டுச் சென்று விட்டார். கணவனைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டபோதும், அவர் தொலைபேசியை எடுக்காததால் சுகமதி மன உளைச்சலில் இருந்துள்ளார்.

ஒரு கட்டத்தில் தற்கொலை செய்துகொள்ள முடிவெடுத்த சுகமதி ஐஸ்கிரீமில் விஷம் கொடுத்து 2 பெண் குழந்தைகளையும் கொன்றுவிட்டு சுகமதியும் தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

தற்கொலைக்கு தூண்டியதாகக் கணவர் கோகுலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.





பி.பி.எல். கிரிக்கெட் தொடரில்

# 2014ஆம் ஆண்டு அணி வெற்றி

■ பு.கஜிந்தன்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட பி.பி.எல். கிரிக்கெட் தொடரில் 2014ஆம் ஆண்டு அணி வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இந்த போட்டிகள் பாடசாலை மைதானத்தில் 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெற்றன. இதில் பாடசாலை சார்பாக ஓரணி பங்குபற்றியதுடன், பழைய மாணவர்களின் 20 அணிகள் பங்குபற்றின. 24ஆம் திகதி 2010 மற்றும் 2014ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு அணிகளுக்கு இடையே இறுதிப் போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் 2014ஆம் ஆண்டு அணியை சேர்ந்த ரி.சரவணன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், 2010 அணியை சேர்ந்த எஸ்.டுசியந்தன் சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.



வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவரும் வட்டுக்கோட்டை, இந்துக் கல்லூரியின் பழைய மாணவனுமான ப.தர்மகுமாரன் பிரதம அதிதியாக பங்குபற்றியதுடன், கல்லூரியின் அதிபர் லங்கா பிரதீபன், பழைய மாணவர் சங்கத்தினர், போட்டியாளர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.



தென்னாபிரிக்காவுக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகள்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த மே. தீவுகள், கிங்ஸ்டனில் ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்ற இரண்டாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே இன்னுமொரு போட்டி மீதமிருக்கையில் தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்து கொண்டது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

மே. தீவுகள்: 207/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றொஸ்டன் சேஸ் ஆ.இ 67 (38), பிரண்டன் கிங் 36 (22), கைல் மேயர்ஸ் 32 (16), அன்ட்ரே பிளட்சர் 29 (18), றொமாரியோ ஷெப்பர்ட் 26 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: நக்பயொம்ஸி பீற்றர் 2/32 [4], பிஜோன் போர்டின் 1/21 [4])

தென்னாபிரிக்கா: 191/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: குயின்டன் டி கொக் 41 (17), றீஸா ஹென்ட்றிக்ஸ் 34 (18), றஸி வான் டர் டுஸன் 30 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: குடகேஷ் மோட்டி 3/22 [4], றொமாரியோ ஷெப்பர்ட் 1/23 [4], றொஸ்டன் சேஸ் 1/26 [4], பேபியன் அலென் 0/5 [1])

போட்டியின் நாயகன்: றொஸ்டன் சேஸ்

நிவ்யோர்க்

பெரும்பான்மை பெற்று

# மீண்டும் ஆட்சி அமைப்பார் மோடி

**அமெரிக்க நிறுவன சிஇஓ நம்பிக்கை**





இந்திய வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவில் பெரும்பான்மை பெற்று பிரதமர் மோடி ஆட்சி அமைப்பார் என்று அமெரிக்காவின் 'இண்டியா பர்ஸ்ட் க்ரூப்' நிறுவனத்தின் சிஇஓ ரான் சோமர்ஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நிவ்யோர்க்கில் உள்ள இந்திய துணைத் தூதரகம் சார்பில் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நடைபெற்று வருகிறது. 140 கோடிக்கு மேல் மக்கள் தொகை கொண்ட நாட்டின் தேர்தல் நடைமுறை வியப்பைத் தருகிறது. உலகமே இந்தியாவின் தேர்தலை உற்று நோக்குகிறது.

இந்தத் தேர்தலில், பிரதமர் நரேந்திர மோடி இந்திய வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவில் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைப்பார் என்று நம்புகிறேன். 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதை இலக்காகக் கொண்டு பிரதமர்மோடி செயல்பட்டு வருகிறார். இதற்காக பல்வேறு சீர்திருத்தங்களை அவர் மேற்கொண்டு வருகிறார்.

இந்தியாவின் அடுத்த 23 ஆண்டு பயணத்தில் அமெரிக்கா உடனான உறவு முக்கியப் பங்கு வகிக்கும். வர்த்தக முதலீடு, பொருளாதார ஒருங்கிணைவு, தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள், கல்வி மற்றும் திறன் மேம்பாடு சார்ந்து இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது இந்தியாவின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்" இவ்வாறு அவர் கூறினார்.

மூன்றாவது போட்டியில்

# ஐ.அமெரிக்காவை சுருட்டிய பங்களாதேஷ்




ஐக்கிய அமெரிக்காவின் ஹூஸ்டனில் சனிக்கிழமை (25) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷின் அணித்தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷன்டோ, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய ஐ. அமெரிக்கா, அன்ட்ரைஸ் கௌஸின் 27 (15) ஓட்டங்கள் மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்றபோதும் ஷகிப் அல் ஹஸன், முஸ்தபிசூர் ரஹ்மான் (6), தன்ஸிம் ஹஸன் சகிப், ரிஷாட் ஹொஸைனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 105 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ், தன்ஸிட் ஹஸனின் ஆட்டமிழக்காத 58 (42), சௌமியா சர்காரின் ஆட்டமிழக்காத 43 (28) ஓட்டங்களோடு 11.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாகவும், தொடரின் நாயகனாகவும் முஸ்தபிசூர் தெரிவானார்.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்ற ஐ.அமெரிக்கா, 2-1 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 27 மே 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.